RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-4 | இதழ்- 162 | ஜூன்.17, 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5





## வேலூரில், தமிழ்நாடு காது கேளாதோர் கூட்டமைப்பின் 2025-2028 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு மற்றும் உறுதிமொழி ஏற்பு விழா

### மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சரவணன் பங்கேற்பு

வேலூர், ஜூன்.17-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் பில்டர் பெட் சாலை, ஆசிரியர் இல்ல கலையரங்கத்தில் தமிழ்நாடு காது கேளாதோர் கூட்டமைப்பின் 2025- 2028 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு மற்றும் உறுதிமொழி ஏற்பு விழா சங்கத் தலைவர் கலைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில் பொதுச் செயலாளர் சுரேஷ் குமார் வரவேற்புரை யாற்றினார். சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சரவணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர் களாக தமிழ்நாடு காது கேளாதோர் கூட்டமைப்பின் துணை சேர்மன் பிரகாஷ், மாநிலத் தலைவராக ஆர்.பழனி சாமி, துணைத் தலைவர் சிக்கந்தர், பொதுச் செயலாளர் ஜி.ஜெய்சங்கர், பொருளாளர் டென்சிங் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்களையும் சிறப்பு விருந்தினர்களையும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஒருவர் செயற்குழு உறுப்பினராகவும் பதவி ஏற்றுக் கொண்டனர். இக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றி கோரிக்கை வைத்ததாவது: 1. அரசு வேலைவாய்ப்பு 4% இட ஒதுக்கீடு இன் படி வேலை வழங்குவது. 2.மாநிலம் முழுவதும் உள்ள அரசு செவித்திறன் குறைவுடையோருக்கான பள்ளியில் மாணவிகளின் கற்றல் குறைபாட்டை நிவர்த்தி செய்தல். 3.சொந்த வீடு நிலம் இல்லாத காது கேளாத மாற்றுத்திறனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் பயன்படுத்தி கொள்வது. 4.தமிழ்நாடு காது கேளாதோர் கூட்டமைப்பின் 2025 2028 ஆம் ஆண்டிற்காக புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் அடுத்த மாதம் 07.07.2025 ஆம் தேதி தமிழக முதல்வர் மற்றும் அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை முதன்மைச் செயலாளர் மாநில மாற்றுத்திறனாளிகள் நல ஆணையாளர் அவர்களை நேரில் சந்தித்து இந்த கோரிக்கைகளை முன் வைத்து மனு வழங்குவது மற்றும் வாழ்த்து பெறுவது. 5.செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் காது கேளாதோர் தினம் மற்றும் சர்வதேச சைகை மொழி தினத்தில் சிறப்பு திட்டங்கள் செயல்படுத்த அரசுக்கு கோரிக்கை வழங்குவது உள்ளிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடப்பட்டது. இவ்விழா இறுதியில் வேலூர் மாவட்ட காது கேளாதோர் சங்க செயற்குழு உறுப்பினர் இராஜ்குமார் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது. இதனைத் தொடர்ந்து மதிய உணவு வழங்கப்பட்டது.

## நீட் தேர்வில் தமிழ்நாடு அளவில் முதல் 10 இடங்கள் பிடித்த மாணவ மாணவியர்களுக்கு பாராட்டு விழா

கிண்டி, ஜூன்.17-

சென்னையில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான நீட் தேர்வு நடைபெற்றது இதில் தமிழகம் மட்டும் இல்லாமல் இந்திய அளவில் மாணவ மாணவியர்கள் ஏராளமானோர் பங்கேற்று நீட் தேர்வினை எழுதினார்கள் இதில் ஸ்ரீ சைதன்யா பள்ளி குழும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர் தமிழக அளவில் ஸ்ரீ சைதன்யா பள்ளியைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் முதல் 10 இடங்களில் ஐந்து பேர் இடம் பிடித்து உள்ளனர் இதனை தொடர்ந்து இந்திய அளவில் முதல் 100 இடங்களில் ஏராளமான மாணவ மாணவியர்கள் இடம்பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது

இதனைத் தொடர்ந்து தமிழகத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் முதல் 10 இடங்களில் இடம் பிடித்த மாணவ மாணவியர்களுக்கு ஆலந்தூரில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் பள்ளி நிர்வாகம் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது இதில் ஸ்ரீ சைதன்யா பள்ளி




குழுமத்தின் இயக்குனர் சுஷ்மா போப்பனா ஸ்ரீ சைதன்யா பள்ளி குழுமத்தின் தமிழ்நாடு சேர்ந்த பள்ளி குழுமத்தின் நிர்வாக தலைவர் ஹரி பாபு ஆகியோர் இணைந்து மாணவ மாணவியர்களுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டு கேடயங்கள் உள்ளிட்டவை வழங்கினார்கள் மேலும் மாணவ மாணவியர்களின் பெற்றோர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தனர் மாணவ மாணவியர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து கேக் வெட்டி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்

இதனைத் தொடர்ந்து. தமிழக அளவில் முதல் 10 இடங்களில் இடம் பிடித்த மாணவ மாணவியர்கள் கூறும்பொழுது இந்த வருடம் கேள்வித்தாள் கடினமாக இருந்தது என்றும் ஆனால் நாங்கள் கடந்த இரண்டு வருடங்களாக பள்ளியில் எங்களுக்கு கற்றுக் கொடுத்தது ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்தது அனைத்தும் வைத்து நாங்கள் சிறப்பாக செயல்பட்டோம் என்றும் தெரிவித்தனர் இதனைத் தொடர்ந்து நீட் தேர்வுக்கு செல்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே எப்படி செல்ல வேண்டும் எந்த முறையில் செல்ல வேண்டும் என்று எங்களுக்கு அறிவுரைகளை தெளிவாக வழங்கினார்கள் என்று மாணவ மாணவியர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து பள்ளி ஆசிரியர்கள் கூறும்போது தங்கள் பள்ளியில் எட்டாம் வகுப்பில் இருந்து நீட் தேர்வுக்கான பயிற்சிகளை வழங்கி வருகிறோம் என்றும் தெரிவித்தனர் இதனை தொடர்ந்து பள்ளியில் மாணவர்கள் படிக்கும் பொழுதும் தேர்வில் சோர்வும் அடையும்போது அவர்களுக்கு தேவையான கவுன்சிலிங்கள் வழங்குவதாகவும் தெரிவித்தனர் மேலும் சைதன்யா பள்ளியில் குழுமத்தில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் நீட் தேர்வு எழுதி உள்ளார்கள் என்றும் அதில் 250க்கும் மேற்பட்டோர் மருத்துவ கல்லூரிக்கு நீட் தேர்வு மூலம் செல்ல இருப்பதாகவும் தெரிவித்தனர். கிவிஷ் 1வது இடத்தையும் திவ்யா 5 வது இடத்தையும் முகமது சமீர் 6வது இடத்தையும், பானோத்து தீரா 8வது இடத்தையும் மங்காரி வருண் 10 வது இடத்தையும் பெற்று சாதனை படைத்தனர்.

இது மட்டுமல்லாமல் ஸ்ரீ சைதன்யாவில் முதல் 100 தர வரிசைகளில் 19 இடங்களையும் 1000 தரவரிசைகளில் 98 இடங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளது .

இதைத் தொடர்ந்து ஸ்ரீ சைதன்யா அகில இந்திய தரவரிசையில் 50வது இடத்தையும், தமிழ்நாடு மாநில தரவரிசையில் 2 வது இடத்தையும் அபிநீத் நாகராஜ் பெற்று சாதனை படைத்தார்.

இது மட்டுமல்லாமல் இந்திய தரவரிசையில் 63வது மற்றும் தமிழ் நாட்டில் 4வது இடத்தை ஹிர்த்திக் விஜயராஜா என்ற மாணவர் பெற்று சாதனை படைத்தார்.

## சென்னை வள்ளுவர்கோட்டத்தை ஜூன் 21ஆம் தேதி திறந்து வைக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூன்.17-

சென்னை வள்ளுவர்கோட்டத்தை ஜூன் 21ஆம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார். மக்களின் பயன்பாட்டிற்காக வள்ளுவர்கோட்டத்தை ஜூன் 21ல் திறந்து வைக்கிறார். புனரமைப்புப்பணிகள் முடிவடைந்த நிலையில் வள்ளுவர் கோட்டம் ஜூன் 21ல் திறக்கப்படுகிறது. சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள வள்ளுவர்கோட்டம் ரூ.80 கோடி மதிப்பில் புனரமைக்கப்பட்டது.



## பம்மல் தெற்கு பகுதி 11வது வட்ட 400 வது பூத் வாக்கு சாவடி கழக செயல்வீரர்கள் கூட்டம்

பம்மல், ஜூன்.16-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பம்மல் தெற்கு பகுதி 11வது வட்ட 400 வது பூத் வாக்கு சாவடி கழக செயல்வீரர்கள் கூட்டம் பம்மல் ஆதாம் நகரில் 400வது வாக்கு சாவடி நிலை முகவர் பிஎல்ஏ2 சி.வெள்ளையப்பன் தலைமையில் 11வது வட்டக் கழக செயலாளர் எம்.சாலமன் என்கின்ற சுகுமாரன் வரவேற்பிலும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் வே.க.தன்ராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக 1வது மண்டல குழு தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளருமான வே.கருணாநிதி, பல்லாவரம் தொகுதி பொறுப்பாளர் கழக சிறுபான்மை நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் ரபி அகமது ஆகியோர் கலந்து கொண்டு பூத் வாக்கு சாவடி கழக செயல் வீரர்களுக்கு எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்

இந்த நிகழ்ச்சியில் வி.ரவிச்சந்திரன், இரா.கந்தவேலு, செ.அமிர்தராஜ், வே.க.புஷ்பராஜ், மு.சதீஷ், ம.இன்பராஜ், ஏ.வினோத்குமார், என்.ஜீவா மற்றும் 400வது பூத் வாக்கு சாவடி முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

இறுதியில் 100வது பூத்து இளைஞரணி ர.அப்பு நன்றி உரையாற்றினார்



## வேலூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் கருத்தரங்கம்

வேலூர், ஜூன்.17-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, தனியார் கல்லூரி வளாகம், வேலூர் மாவட்ட அரசு பள்ளி மாணவ, மாணவியர்களின் வெற்றிக்கான கல்வி சவால்களை எதிர்கொள்ளும் வழிமுறைகள் குறித்த தலைமை

ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகளுக்கான கருத்தரங்கை வேலூர் விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த (14.06.2025) அன்று மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தொடங்கி வைத்து, ஒரு மதிப்பெண் வினா விடை புத்தகத்தை வெளியிட்டார்கள்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி.விசுவநாதன் கலந்து கொண்டு புத்தகத்தை வெளியிட்டனர், இதில் பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் எஸ்.கண்ணப்பன், மாவட்ட முதன்மை

கல்வி அலுவலர் தயாளன், மாவட்ட கல்வி அலுவலர் சத்திய பிரபா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




வேலூர், ஜூன்.17-

வேலூர் மாவட்ட அரசு இரத்த வங்கி மற்றும் அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்திய உலக இரத்த கொடையாளர் தின விழாவில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, கலந்து கொண்டு இரத்தக் கொடையாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. எம்.ரோகினி தேவி, மருத்துவமனை

கண்காணிப்பாளர் மரு. என். ரதிதிலகம், மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் மரு. கௌரி வெலிகண்ட்லா, குடியிருப்பு மருத்துவ அலுவலர் மரு. டி.ரவிச்சந்திரன், இணை இயக்குநர் (மருத்துவ நலப் பணிகள்) மரு. டி. ஆக்னஸ் பியூலா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பா. பரணிதரன், மாவட்ட இரத்தப் பரிமாற்று அலுவலர் மரு. ஜி. சிவராமன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம் திருமங்கலம் விடுதலை போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது நினைவு இல்லத்தில் உள்ள திருவுருவசிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா இ.ஆ.ப., தமிழ்நாடு அரசின் சார்பாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



## 100 நாள் வேலைத் திட்டத்தில் அனைவருக்கும் பணம் ஏறவில்லை என்பதே குற்றச்சாட்டு

சென்னை, ஜூன்.17-

தமிழக முழுவதும் நடைபெற்று வரும் 100 நாள் வேலை திட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் வேலை பார்த்து பல நாட்கள் பல மாதங்கள் ஆகியும் எங்களுக்கு இன்னும் பணம் ஏறவில்லை என்ற குற்றச்சாட்டு அதிகமாக இருந்த வண்ணம் உள்ளது இது குறித்து மாவட்ட நிர்வாகம் மற்றும் சிறப்பாக ஆட்சி அமைத்து வரும் முதல்வர் துணை முதல்வர் பெண்களுக்காகவும் ஏழை எளியவர்களுக்காகவும் அமைக்கப்பட்ட இந்த 100 நாள் வேலைத்திட்டத்தில் பணியாற்றும் அனைவருக்கும் தடையின்றி தாமதமின்றி அவர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெற்று தர வேண்டும் என்பதே அனைவரின் வேண்டுகோளாக உள்ளதுசிவகங்கை வருகை தரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எங்களின் கோரிக்கையை நிறைவேற்றி தர வேண்டும் என்று நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.



## திண்டுக்கலில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி வாரிய தலைவர் ஆய்வு

திண்டுக்கல், ஜூன்.17-

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி வாரிய தலைவர் தஞ்சை ஜீவா திண்டுக்கல்லில் உள்ள அரசு கேபிள் டிவி கட்டுப்பாட்டு அறையை ஆய்வு செய்யும் போது கூறியதாவது

தமிழகத்தில் முன்னாள் முதல்வர் கலைஞர் தலைமை யிலான ஆட்சிக் காலத்தில் அரசு கேபிள் டிவி நிறுவனம் தொடங்க ப்பட்டது.. தற்போது தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்களின் பல ஆண்டுகால கோரிக்கையான வாரியத்தை அமைத்துக் கொடுத்து எட்டு ஆண்டு கால கோரிக்கையான எச்டி உயர் வரையறை செட்டாப் பாக்ஸ் வழங்கப்பட்டு வருவதையும், தடையில்லா சிக்னல் மற்றும் தனியார் நிறுவனத்திற்கு நிகராக உள்ளூர் சேனல்கள் ஆகியவற்றை வழங்கி வருவதையும், அரசு கேபிள் டிவியில் இருந்து பல்வேறு காரணங்களுக்காக வெளியேறி, தனியார் நிறுவனத்திற்கு சென்ற ஆபரேட்டர்கள், தற்போது அரசு கேபிளில் சேவை மற்றும் குறைந்த கட்டணம் ஆகியவற்றால் ஆர்வத்துடன் மீண்டும் அரசு கேபிள் டிவியில் இணைந்து, கேபிள் டிவி சேவையைப் பெற்று பொதுமக்களுக்கு சிறப்பாக வழங்கி வருவதாகவும் மேலும் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு 2 லட்சம் ரூபாய் வரை வங்கி கடன் வழங்க இந்தியன் ஓவர்சீஸ் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஆப்பரேட்டர்களுக்கு உடனடியாக கடனுதவி 25 ஆயிரம் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு புதிய எச்டி செட்டாப் பாக்ஸ் வாங்க ரெண்டு லட்ச ரூபாய் வீதம் 500 கோடி வழங்க ஒப்புதல் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆபரேட்டர்களுக்கு தாமதம் இன்றி வங்கி கடன் மூலம் எச்டி செட்டாப் பாக்ஸ் வழங்கி வருவதற்கு, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், கேபிள் டிவி வாரிய தலைவர் தஞ்சை ஜீவா மற்றும் கேபிள் டிவி மேலாண்மை இயக்குனராக கூடுதல் பொறுப்பாக செய்தித் துறை இயக்குனர் வைத்தியநாதன் ஆகியோருக்கும் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் நன்றி தெரிவித்தனர்...



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் பகுதியில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அதன் அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கோவி. செழியன், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.டி.ஆர். பாலு, திரு. கல்யாண சுந்தரம், திரு. எஸ். முரசொலி, முன்னாள் அமைச்சர் திரு. பழனிமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. துரை. சந்திரசேகரன், திரு. க. அன்பழகன், திரு. டி.கே.ஜி. நீலமேகம், திரு. க. அண்ணாதுரை, திரு. என். அசோக்குமார், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் திரு. சண். இராமநாதன், துணை மேயர் திரு. அஞ்சுகம் பூபதி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## காளையார்கோவிலில் மிதிவண்டி போட்டி நடைபெற்றது

காளையார் கோவில், ஜூன்.17-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் விளையாட்டு மையங்களின் கூட்டமைப்பு சார்பாக ஒலிம்பியாட் கொடி அறிமுக விழாவும் மிதிவண்டி போட்டியும் அரசு மேல்நிலைப்பள்ளி முன்புறம் சிறப்பாக நடைபெற்றது. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் முருகன் தலைமை வகித்தார். விளையாட்டு மையங்களின் கூட்டமைப்பின் தலைவர் பகீர் முகைதீன் செயலாளர் முனைவர் சூசை ஆரோக்கிய மலர் சட்ட ஆலோசகர் சேதுபாண்டியன் முன்னிலை வகித்தனர். முதன்மை தூதுவர் ஆரோக்கியசாமி வரவேற்புரை ஆற்றினார். காளையார்கோவில் காவல் ஆய்வாளர் சரவணபோஸ் ஸ்போர்ட்ஸ் ஒலிம்பியாட்டின் கொடியினை அறிமுகம் செய்து வைத்தார். காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் முனைவர் மணியழகு போட்டியினை தொடங்கி வைத்தார். ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை மாணவ மாணவிகளுக்கு தனித்தனியாகவும் 9 முதல் 12 வகுப்பு வரை மாணவ மாணவிகளுக்கு தனித்தனியாகவும் பொது பிரிவினரில் ஆண்கள் பெண்களுக்கு தனித்தனியாகவும் மூத்தோர்களுக்கு தனியாகவும் நடந்த மிதிவண்டி போட்டிகளை துணைத் தலைவர்கள் நாகராஜன் மோசஸ் ராமர் பாண்டி மாஸ்டர் ஸ்போர்ட்ஸ் கிளப் செயலாளர் திருநாவுக்கரசு பொருளாளர் பார்த்திபன் ஆகியோரால் தொடங்கபட்டு முக்கிய சாலை வழியாக புலிக்கண்மாய் விலக்கில் திரும்பி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் வழியாக அரசு மேல்நிலைப் பள்ளி முகப்பில் வந்தடைந்தார்கள். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடத்தை பெற்றவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் நினைவு பரிசும் வழங்கப்பட்டன. கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பொருளாளர் சுரேஷ் நன்றி கூறினார். 12 விளையாட்டு கூட்டமைப்பின் முதன்மை விளையாட்டு தூதுவர்கள் ராஜா சசிகுமார் லூயிஸ் லெவே ரமேஷ் ஆரோக்கியசாமி பத்மநாபன் கவிதை கண்ணன் தட்சிணாமூர்த்தி ராகுல் டேவிட் அலெக்சாண்டர்துரை பாண்டி மாதவன் முத்துக் குமார் சுந்தர் சீனிவாஸ் ஜான் அலெக் சாண்டர் அருள் ஜெயசிங் ரவிச்சந்திரன் குமாரசாமி கணேசன் சுந்தர் ராஜா அருளானந்தம் பாரதி ராமநாதன் ஆகியோர் போட்டிக்கான போட்டியாளர்களை பங்கேற்க செய்தனர். முனைவர் சியாமளா ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியர்கள் சான்றிதழ் வழங்கும் பணியை மேற்கொண்டனர். போட்டியாளர்களுக்கு காவல்துறை மூலமாக தகுந்த பாதுகாப்பும் காவேரி மருத்துவமனையின் ஆம்புலன்ஸ் சேவையும் சிறப்பாக செய்யப்பட்டிருந்தது. பொறுப்பாளர்களும் தன்னார்வலர்களும் பொது மக்களும் பெற்றோர்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். நிதிக்குழு உறுப்பினர் ஆரோக்கியசாமி முதன்மை தூதுவர் லூயிஸ் லெவே நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினர்.



## புனே ஆற்றுப் பாலம் இடிந்து விபத்து: பலி எண்ணிக்கை 4 ஆக உயர்வு பலர் மாயம்

புனே, ஜூன்.17-

புனேவில் உள்ள இந்திரயானி ஆற்றின் மீது இருந்த இரும்புப் பாலம் இடிந்து விழுந்ததில் சுற்றுலா பயணிகள் பலர் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இந்த விபத்தில் 2 பேர் உயிரிழந்ததாக கூறப்பட்ட நிலையில், தற்போது பலி எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது.

புனேவில் மாவல் தாலுகாவில் உள்ள பிரபலமான சுற்றுலாத் தலமான குண்ட்மாலாவில் உள்ள இரும்புப் பாலம் இடிந்து விழுந்த நேரத்தில், பாலத்தில் இருந்த சுற்றுலாப் பயணிகள் பலரும் பெருக்கெடுத்து ஓடிய ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

தேசிய பேரிடர் மீட்புப் படை, காவல் துறை மற்றும் பேரிடர் நிவாரணப் பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். முதலில் இரண்டு பேரின் உடல்கள் மீட்கபட்ட நிலையில், தற்போது மேலும் 2 உடல்கள் மீட்கபட்டுள்ளதாகவும், 15 முதல் 20 பேர் வரை ஆற்றில் அடித்துச் செல்லப்பட் டிருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். சுமார் 250 வீரர்கள் இந்த மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆற்றின் நீரோட்டம் அதிகமாக இருப்பதால் மீட்புப் பணி கடினமாக இருப்பதாக அவகள் தெரிவித்துள்ளனர். பாலம் இடிந்து விழுந்ததில் 32 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். அவர்களில் 6 பேரின் உடல்நிலை கவலைக் கிடமாக உள்ளது.

உயிரிழந்த நால்வரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ள மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ் தலா ரூ.5 லட்சம் நிவாரணத் தொகை வழங்கவும் உத்தரவிட்டுள்ளார். மேலும் விபத்து குறித்து தொலைபேசி வாயிலாக பிரதமர் மோடி தன்னை தொடர்பு கொண்டு கேட்டறிந்ததாக அவர் தெரிவித்துள்ளார். கடந்த நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு புதுப்பிக்கப்பட்ட இந்த பாலத்தின் பாதுகாப்பு குறித்து அப்பகுதி மக்கள் ஏற்கெனவே கவலை தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. மேலும் ஆற்றின் நீரோட்டத்தை காண அதிகமான மக்கள் பாலத்தின் மீது குவிந்ததே இந்த விபத்துக்கு காரணமாக கூறப்படுகிறது.

## கேதார்நாத் ஹெலிகாப்டர் விபத்தில் 7 பேர் உயிரிழப்பு நடந்தது என்ன?

உத்தராகண்ட், ஜூன்.17-

உத்தராகண்டின் கேதார்நாத் கோயில் அருகே ஹெலிகாப்டர் விழுந்து நொறுங்கியதில் விமானி உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

உத்தராகண்டில் சார்தாம் என்றழைக்கப்படும் பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, யமுனோத்திரி ஆகிய புனித தலங்கள் அமைந்துள்ளன. இதில் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் அமைந்துள்ள கேதார்நாத் கோயில் 12 ஜோதிர்லிங்கங்களில் முதன்மையானது. சுமார் 1,000 ஆண்டுகள் பழமையான இந்த கோயில் பனிக் காலத்தில் மூடப்பட்டிருக்கும். கோடைக்காலத்தில் 6 மாதங்கள் மட்டுமே திறந்திருக்கும்.

இந்த ஆண்டு கடந்த மே 2ம் தேதி கேதார்நாத் கோயில் திறக்கப்பட்டது. நாள்தோறும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கோயிலுக்கு வருகை தருகின்றனர். பக்தர்களின் வசதிக்காக ஹெலிகாப்டர் சேவை இயக்கப்படுகிறது. இதற்காக கேதார்நாத்தில் 3 ஹெலிபேட் தளங்கள் உள்ளன. இங்கிருந்து 9 தனியார் நிறுவனங்கள் ஹெலிகாப்டர் சேவைகளை இயக்கி வருகின்றன. ஒரு ஹெலிகாப்டரில் விமானி உட்பட 7 பேர் பயணம் செய்ய முடியும். நாள்தோறும் 1,500 பேர் ஹெலிகாப்டர் மூலம் கேதார்நாத் கோயிலுக்கு வருகை தருகின்றனர்.

இந்த சூழலில் கேதார்நாத் கோயிலில் வழிபாடு நடத்திய 6 பக்தர்கள், கேதார்நாத்தில் இருந்து நேற்று ஹெலிகாப்டர் மூலம் குப்தகாஷிக்கு சென்றனர். விமானி ராஜ்வீர் சிங் சவுகான் ஹெலிகாப்டரை இயக்கினார். இந்த ஹெலிகாப்டர் கவுரிகண்ட் சோன்பிரயாக் வனப்பகுதியில் பறந்தபோது கீழே விழுந்து நொறுங்கியது. இதில் விமானி உட்பட 7 பேரும் உயிரிழந்தனர். தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படையை சேர்ந்த வீரர்கள் நீண்ட நேரம் போராடி சடலங்களை மீட்டனர்.

மகாராஷ்டிராவை சேர்ந்த ராஜ்குமார் சுரேஷ் (41), அவரது மனைவி சாரதா (35), அவர்களது பெண் குழந்தை காசி (2), உத்தர பிரதேசத்தை சேர்ந்த வினோத் தேவி (66), அவரது பேரன் திரிஸ்டி சிங் (19), உத்தராகண்டின் ருத்ரபிரயாக் மாவட்டம், ரான்சி பகுதியை சேர்ந்த விக்ரம் (46), ராஜஸ்தானை சேர்ந்த விமானி ராஜ்வீர் சிங் சவுகான் ஆகிய 7 பேர் உயிரிழந்து உள்ளனர்.

உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், “ஹெலிகாப்டர் விபத்தில் பக்தர்கள் உயிரிழந்திருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. மீட்புப் படை வீரர்கள் நிவாரண பணிகளில் ஈடுபட்டு உள்ளனர்” என்று தெரிவித்துள்ளார்.



உத்தராகண்ட் விமான போக்குவரத்து மேம்பாட்டு ஆணைய தலைமை செயல் அதிகாரி சோனியா கூறும்போது, “மோசமான வானிலை காரணமாக ஆர்யான் அவிட்டேசன் நிறுவனத்தின் ஹெலிகாப்டர் விபத்தில் சிக்கியிருக்கிறது. அடுத்த 2 நாட்களுக்கு ஹெலிகாப்டர் சேவை முழுமையாக ரத்து செய்யப்படுகிறது” என்று தெரிவித்தார்.

கேதார்நாத் புனித யாத்திரை ரத்து: கேதார்நாத் கோயிலுக்கு செல்லும் மலைப் பாதையில் ஆங்காங்கே நிலச்சரிவு ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக சோன்பிரயாக் பகுதியில் பாறைகள் உருண்டு விழுந்துள்ளன. இதைத் தொடர்ந்து கேதார்நாத் புனித யாத்திரை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டு உள்ளது. கோயிலுக்கு வருகை தந்த பக்தர்கள் தங்கள் பயணத்தை தொடரக்கூடாது. அவரவர் தங்கியுள்ள இடங்களை விட்டு வெளியேறக்கூடாது. பாதைகள் சீரமைக்கப்பட்ட பிறகு புனித யாத்திரைக்கு அனுமதி அளிக்கப்படும் என்று போலீஸார் தெரிவித்து உள்ளனர்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்பாக மோசமான வானிலை காரணமாக ருத்ரபிரயாக் சாலையில் ஹெலிகாப்டர் அவசரமாக தரையிறக்கப்பட்டது. இதில் பயணம் செய்த பக்தர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். கடந்த 6 வாரங்களில் மட்டும் அடுத்தடுத்து 5 ஹெலிகாப்டர் விபத்துகள் நேரிட்டு உள்ளன. எனவே ஹெலிகாப்டர் சேவையில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க உத்தராகண்ட் அரசு முடிவு செய்துள்ளது.

உயர்நிலைக் குழு விசாரணை: ஹெலிகாப்டர் விபத்து குறித்து உத்தராகண்ட் அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஹெலிகாப்டர் சேவை வழங்கும் நிறுவனங்களுடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்படும். பாதுகாப்பு அம்சங்கள் உறுதி செய்யப்பட்ட பிறகே சார்தாம் புனித யாத்திரைக்கான ஹெலிகாப்டர் சேவை மீண்டும் தொடங்கப்படும்.

தலைநகர் டேராடூனில் ஹெலிகாப்டர் சேவைகளுக்கான கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்படும். இந்த மையத்தில் விமான போக் குவரத்து இயக்குநரகம், தேசிய பேரிடர் மீட்புப் படை, விமான போக்குவரத்து துறை, ஹெலிகாப்டர் சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள் இணைந்து பணியாற்றுவார்கள், கேதார்நாத் ஹெலிகாப்டர் விபத்து தொடர்பாக உயர்நிலைக் குழு விசாரணை நடத்த முதல்வர் புஷ்கர் சிங் தாமி உத்தரவிட்டுள்ளார். தவறுகள் கண்டறியப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அனுபவம் உள்ள விமானிகளை மட்டுமே பணியமர்த்த வேண்டும். மோசமான வானிலையின்போது ஹெலிகாப்டர்களை இயக்கக்கூடாது என்பன உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். ஹெலிகாப்டர் பயணத்தின்போது பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான விதிகளை வரையறுக்க தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்நிலைக் குழுவை அமைக்க முதல்வர் புஷ்கர் சிங் தாமி உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனித நேய மக்கள் கட்சியின் சார்பில் வருகின்ற 19/06/2025 அன்று கண்டண ஆர்ப்பாட்டம்

சிவகங்கை, ஜூன்.17-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பகுதியில் தொடர் மின் வெட்டு காரணமாக மின் சாதனங்கள் பழுதடைந்தது மேலும் மின் கட்டணங்களில் குளறுபடி ஏற்பட்டுள்ளதால் மின்சார வாரியத்தினை கண்டித்து இளையான்குடி கண்மாய் கரை முன்பாக மனித நேய மக்கள் கட்சியின் சார்பில் வருகின்ற 19/06/2025 அன்று கண்டண ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

## ஏஐ மூலம் செயல்படும் ஸ்மார்ட் ஹீமோ டயாலிசிஸ் கருவி ‘ரெனாலிக்ஸ்’ அறிமுகம்

சென்னை, ஜூன்.17-

ஏஐ மூலம் செயல்படும் உலகின் முதல் ஸ்மார்ட் ஹீமோ டயாலிசிஸ் கருவியை ‘ரெனாலிக்ஸ்’ நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது

சிறுநீரகப் பராமரிப்பு கருவி தயாரிப்பில் முன்னோடியாக விளங்கும் ரெனாலிக்ஸ் ஹெல்த் சிஸ்டம்ஸ் நிறுவனம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ரெனாலிக்ஸ் ஆர்.எக்ஸ்.டி. 21 என்ற ஸ்மார்ட் ஹீமோ டயாலிசிஸ் கருவியை அறிமுகம் செய்துள்ளது. உலகிலேயே முதல் முறையாக செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மற்றும் கிளவுட் தளத்தில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால், இதை தொலை தூரத்திலிருந்து ரிமோட் மூலம் இயக்க முடியும். மருத்துவ கண்காணிப்பும் சாத்தியம்.

இதன் ஆரம்ப விலை ரூ.6.7 லட்சம். இது இறக்குமதி செய்யப்படும் இயந்திரத்தின் விலையை விட 40% குறைவு. இதனால், கிராமப்புற மற்றும் வளர்ந்து வரும் நகர்ப்புற மக்களும் டயாலிசிஸ் சிகிச்சையை பெற முடியும்.

இதுகுறித்து ரெனாலிக்ஸ் நிறுவனர் மற்றும் இயக்குநரான டாக்டர் ஷ்யாம் வாசுதேவ ராவ் கூறும்போது, “அடுத்த 4 ஆண்டுகளில் ரூ.800 கோடியை முதலீடு செய்வதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம். 202526 நிதி ஆண்டில் 5 ஆயிரம் கருவிகளைத் தயாரிக்கவும் 202728 நிதி ஆண்டில் கூடுதலாக 1,500 கருவிகளை தயாரிக்கவும் திட்டமிட்டுள்ளோம். எங்களுக்கு பெங்களூரு, மைசூரு மற்றும் மும்பையில் ஆலைகள் உள்ளன. எங்கள் கருவியின் விலை குறைவாக இருப்பதால் ஏழை நோயாளிகளும் பயன்பெற முடியும். இது சிறுநீரகப் பராமரிப்பில் புரட்சியை ஏற்படுத்தும். இதனால் நாட்டின் சிறுநீரக சுகாதார உள்கட்டமைப்பு வலுப்பெறும்” என்றார்.



## தமிழகத்தில் குரூப் 1, 1 ஏ முதல்நிலை தேர்வை 1.86 லட்சம் பேர் எழுதினர்: டிஎன்பிஎஸ்சி தலைவர் தகவல்

சென்னை, ஜூன்.17-

குரூப்4 தேர்வுக்கான காலி பணியிடங்கள் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக டிஎன்பிஎஸ்சி தலைவர் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் துணை ஆட்சியர், டிஎஸ்பி உள்ளிட்ட பணிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான குரூப்1 மற்றும் 1ஏ முதல்நிலை தேர்வு மாநிலம் முழுவதும் நேற்று நடைபெற்றது. சென்னை எழும்பூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த தேர்வு மையத்தை டிஎன்பிஎஸ்சி தலைவர் எஸ்.கே.பிரபாகர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: குரூப் 1 தேர்வில் எளிமைப்படுத்தப்பட்ட ஓஎம்ஆர் விடைத்தாள் வழங்கப்பட்டுள்ளது. இது மாணவர்களுக்கு வசதியாக இருக்கும். குரூப்1 முதல்நிலை தேர்வு முடிவுகள் 2 மாதத்துக்குள் வெளியிடப்படும். தொடர்ந்து, 3 மாதங்களில் முதன்மை தேர்வு நடைபெறும்.

டிஎன்பிஎஸ்சி தேர்வுகள் சரியான முறையில் திட்டமிடப்பட்டு சிறப்பாக நடத்தப்படுகின்றன. முன்பெல்லாம் 90 தேர்வுகள் வரை நடைபெறும். தற்போது அனைத்தையும் ஒருங்கிணைத்து 7 தேர்வுகள்தான் நடத்தப்படுகின்றன. இதன்மூலம், மாணவர்கள் பல்வேறு தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பதில் குழப்பம் ஏற்படுவதை தவிர்க்கலாம். தேர்வு நடத்துவதற்கான நேரம், செலவு உள்ளிட்டவையும் குறைந்துள்ளது.

தேர்வை எளிதாக எதிர்கொள்ள, ஒவ்வொரு பாடத் திட்டத்தையும் 10 பகுதிகளாக பிரிக்கிறோம். அனைத்து காலி பணியிடங்கள் வரும் வரை காத்திருக்காமல், தொடக்கத்தில் உள்ள காலி இடங்களை உத்தேசமாக வைத்து தேர்வு நடத்தப்படுகிறது. பின்னர் காலி பணியிடம் தேவைக்கேற்ப அதிகரிக்கப்படுகிறது. குரூப்4 தேர்வுக்கு காலி பணியிடங்கள் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

டிஎன்பிஎஸ்சி மூலம் கடந்த 2024ம் ஆண்டு ஒட்டுமொத்தமாக 10,701 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டில் ஜனவரி முதல் இதுவரை 10,227 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டு இறுதிக்குள் மேலும் 12,231 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## பள்ளிக்கல்வி துறையில் ஜூன் 23, 24ம் தேதி அமைச்சர் ஆய்வு

சென்னை, ஜூன்.16-

பள்ளிக் கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமையில் சென்னையில் ஜூன் 23, 24ல் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட உள்ளது.

தமிழகத்தில் அரசுப்பள்ளிகளின் மேம்பாட்டுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை மாணவர்களுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்வதற்காக துறை சார்ந்த ஆய்வுகளை பள்ளிக்கல்வித் துறை செய்துவருகிறது.





அதன்படி பள்ளிக் கல்வியின் செயல்பாடுகள் தொடர்பாக துறையின் அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமையில் ஆய்வுக் கூட்டம் சென்னை டிபிஐ வளாகத்தில் ஜூன் 23, 24ம் தேதிகளில் மாவட்ட வாரியாக நடத்தப்பட உள்ளது.

அதன்படி கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராமநாதபுரம் உட்பட 13 மாவட்டங்களுக்கு ஜூன் 23ம் தேதி காலையும், கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், அரியலூர், மதுரை, ஈரோடு, திருச்சி உட்பட 12 மாவட்டங்களுக்கு மதியமும் ஆய்வுக் கூட்டம் நடைபெறும். அதேபோல், தருமபுரி, கிருஷ்ணகிரி, நீலகிரி, கோவை, கரூர், நாமக்கல், வேலூர், சென்னை உள்ளிட்ட 13 மாவட்டங்களுக்கு ஜூன் 24ம் தேதி கூட்டம் நடத்தப்படும். இதுசார்ந்த தகவல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அந்தந்த மாவட்டங்களில் பணிபுரியும் முதன்மை மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாவட்டமாக அழைக்கப்பட்டு களநிலவரம் ஆய்வு செய்யப்படவுள்ளது.

மேலும், கூட்டத்தில் மாவட்ட அலுவலர்கள் கலந்து கொள்ளும்போது அந்தந்த மாவட்டத்துக்குரிய கண்காணிப்பு பொறுப்பில் உள்ள துறை இயக்குநர்களும் பங்கேற்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கல்வித்துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி 26வது நகர் மன்ற உறுப்பினர் க.அழகர்சாமி(எ) செல்வம் இல்ல காதணி விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள் உட்பட்ட பலர் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் கலந்து கொண்டு குழந்தை செல்வங்களை வாழ்த்தினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் நெட்டூர் அய்யாசாமி, திருப்புவனம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கடம்பசாமி மாவட்ட பிரதிநிதி ராமலிங்கம் முன்னாள் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் மூர்த்தி, பிரபு, மானாமதுரை முன்னாள் கவுன்சிலர் ப.கணேசன் மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



■ மதுரை மாநகருக்கு வருகை புரிந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை மேயர் இந்திராணி பொன் வசந்த்மதுரை விமான நிலையத்தில் புத்தகம் வழங்கி வரவேற்றார்



■ சிவகங்கை பேருந்து நிலையத்தை புதிதாக மறுசீரமைக்க உள்ள மேற்கூரை மற்றும் தளத்தினை மத்திய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் ரூ. 2 கோடி MP நிதியில் நடைபெறும் சிவகங்கை பேருந்து நிலையம் கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார்.





■ சிவகங்கைஅரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சுற்றி அதிகமாக புல் புதருமாக இருந்தது இதனால் விஷ சந்துக்களாலும் வண்டுளும் அதிகம் இருந்த சூழலில் அதிரடி நடவடிக்கையாக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர், மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர் BDO உடனடியாக அப்பகுதிகளை ஆய்வு செய்து சுத்தம் செய்துஉதவியதற்கு அப்பகுதி வணிகர்கள் மற்றும் சிகிச்சை பெற்று வரும்நோயாளிகள் பயமின்றி சென்று வந்தனர் இதனால் முதல்வர் மற்றும் BDO விற்க்கு நன்றிகளை தெரிவிகத்துக் கொண்டனர்.மேலும் இதே போல் சுற்றுப்புற பகுதிகளை தூய்மை செய்து கொடுத்தால் இன்னும் எதுவாக இருக்கும் என்று தெரி வித்துள்ளனர்.

# சட்டமன்ற உறுப்பினரின் செயல்பாடுகளால் நம்ம மானாமதுரை வளர்ச்சி பாதையில்





மானாமதுரை, ஜூன் .17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் 2021 ஆம் சட்டமன்ற உறுப்பினராக ஆ. தமிழரசி ரவிக்குமார் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட பிறகு மானாமதுரை திருப்புவனம் இளையான்குடி மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் உள்ள பகுதிகளில் அடிக்கடி மின் பழுது ஏற்பட்டதால் புதிய மின்மாற்றிகளை கிராமப்புற பகுதிகளுக்கு கொண்டு வந்து தங்கு தடையின்றி மின்சாரம் கிடைப்பதற்கு வழிவகுத்தார்.மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இளையான்குடி தெற்கு ஒன்றியம் சாத்தனூர் கிராமத்தில் இராமநாதபுரம், ஆர்.எஸ். மங்கலம், சாத்தனூர், பஞ்சனூர், சாலை கிராமம், இளையான்குடி, சிவகங்கை, மதுரை ஆகிய கிராம மக்கள் பயன்பெறும் வகையில் புதிய பேருந்து வழித்தடத்தினை மக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்.மானாமதுரையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லாத காரணத்தினால் இப்பகுதி மாணவர்கள் 20 கி.மீ., தூரமுள்ள சிவகங்கை, இளையான்குடிக்கு செல்ல வேண்டியிருந்தது. நீண்ட காலமாக இங்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.இந்த நிலையில் மானாமதுரை சட்டமன்ற தொகுதி உறுப்பினர் தமிழரசி சட்டமன்ற கூட்டத் தொடரில் மானாமதுரையில் கல்லூரி துவங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். சட்டமன்ற கூட்டுத் தொடரில் நடைபெற்ற பட்ஜெட் கூட்டத் தொடரில மானாமதுரையில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்படும் என அறிவிப்பு வெளியானதற்கு மானாமதுரை எம்எல்ஏ வைத்த கோரிக்கையை காரணம். கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நிதி அமைச்சரும் முதலமைச்சரும் முதலில் தற்காலிகமாக கல்லூரி அமைவதற்கு காணொளி காட்சி வாயிலாக செய்களத்தூரில் பாலிடெக்னிக் கல்லூரியில் வகுப்புகள் தொடங்கப் பட்டுள்ளது. ஒரு சட்டமன்ற தொகுதிக்கு என்னென்ன வேண்டும் என்பதையும் பொதுமக்களுக்கு அத்தியாவசியமான அடிப்படை கோரிக்கை யையும் தமிழக முதல் வரிடம் கோரிக்கையாக வைத்து அந்த கோரிக் கைகளை நிறைவேற்றும் நம்பிக்கை பெற்ற நாயகியாக உலா வருகிறார். பொதுமக்களுக்கு தேவை யான மின்சாரம்,சாலை வசதி, குடிநீர் வசதி, போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தித் தந்தவர் இந்த எம்எல்ஏ தமிழரசி விவசாயிகளுக்கு நாட்டார் கால்வாய் திட்டம்,தொழில் கல்வி பயிற்சி மையம்,மினி விளையாட்டு அரங்கம் இவரின் செயல்பாடுகளில் சில இப் பகுதியில் ஒருமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டதற்கு என்னற்ற வளர்ச்சி திட்டங்களை கொண்டு வந்தவர் மீண்டும் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்படும் பொழுது மானாமதுரைக்கு தேவையான வளர்ச்சி திட்ட பணிகளை அதிகளவில் கொண்டு வந்து தமிழகமே திரும்பி பார்க்கும் அளவிற்கு சிறந்த சட்டமன்றத் தொகுதியாக கருதப்படும் என பொதுமககளல் கூறப்படுகிறது.





■ சிவகங்கை அருகே இலுப்பகுடியில் உள்ள இந்தோ ரு திபெத் பாதுகாப்பு படை பயிற்சி மையத்தின் சார்பில் அரசனூர் அரசு பள்ளியில் கமாண்டர் வீ.ஆர்.சந்திரன் தலைமையில் 60ற்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களுக்கு யோகாசனம் செய்யும் பயிற்சி இன்று அளிக்கப்பட்டது. பயிற்சியின்போது, யோகா மூலம் உடல்நலம் பாதுகாக்கப்படுவது பற்றியும், உடலுறுப்புகள் சீராக செயல்படுவது பற்றியும் எடுத்துக்கூறப்பட்டது.




■ செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூரில் தமிழக வெற்றி கழகம் தலைவர் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுச் செயலாளர் என்.ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின் படி தமிழக வெற்றிக் கழகம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி டாக்டர் எம்.செந்தில் குமார் அவர்கள் தலைமையில் செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் டி.சரத்குமார் அவர்கள் முன்னிலையில் 59வது வார்டு பெருங்களத்தூர் தெற்கு பகுதி மற்றும் தீபம் மருத்துவமனை தீபம் கண் மருத்துவமனை இணைந்து நடந்த மாபெரும் பொதுநல மருத்துவ முகாம் (14/6/25) காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடைபெற்றது இதில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். முகாம் ஏற்பாடு எல்.மகேஷ், ஜே.ஆனந்த் உடன் பகுதி நிர்வாகிகள் வார்டு நிர்வாகிகள் மற்றும் அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்



## திருப்பூர் மாவட்ட ஆட்சியர் த.கிறிஸ்துராஜ் வெள்ள அபாய எச்சரிக்கை

திருப்பூர், ஜூன்.17-

திருப்பூர் மாவட்டம், பருவ மழை காரணமாக உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது தற்போது 14.06.2025 அன்று காலை 7.00 மணியளவில் 85.11 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அமராவதி அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது பொதுமக்களின் பாதுகாப்பை கருதி கொண்டு அமராவதி ஆற்றில் எந்த நேரத்திலும் உபரி நீர் திறந்துவிடப்படலாம். எனவே அமராவதி ஆற்றின் கரையோரப் பகுதியில் உள்ள பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது என மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்..



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி 26வது நகர் மன்ற உறுப்பினர் க.அழகர்சாமி(எ) செல்வம் இல்ல காதணி விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.இதில் அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள் உட்பட்ட பலர் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் கலந்து கொண்டு குழந்தை செல்வங்களை வாழ்த்தினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் நெட்டூர் அய்யாசாமி, திருப்புவனம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கடம்பசாமி மாவட்ட பிரதிநிதி ராமலிங்கம் முன்னாள் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் மூர்த்தி, பிரபு, மானாமதுரை முன்னாள் கவுன்சிலர் ப.கணேசன் மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்







# சிவகங்கை மேலூர் நெடுஞ்சாலையில் உதவி கோட்டபொறியாளர் ஆக்கிரமிப்பு அகற்றுவதில் பாரபட்சம்

சிவகங்கை, ஜூன்.17-

சிவகங்கையில் இருந்து மேலூர் வரை புதிய அகல நெடுஞ்சாலை பணி நான்கு மாதங்களுக்கு மேலாக பணி நடந்து வருகிறது இந்த பணி நடப்பதற்கு முன்பாகவே உதவி கோட்ட பொறியாளர் கோட்ட பொறியாளர்கள் நேர் பார்வையிட்டு அரசு சாலையின் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள சுவர்கள் மற்றும் பேனர்கள் அகற்றப்பட்டு வந்த நிலையில் உதவி கோட்ட பொறியாளருக்கு பெரிய அளவில் பணம் கைமாற ப்பட்டதாக பரவலாக பேசப்பட்டு வருகிறது இது சம்பந்தமாக நேரடி கலாய் செய்தோம் கலா ஆய்வு செய்த பொழுது சில இடங்களில் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது இதுகுறித்து உதவி கோட்ட பொறியாளரிடம் ஏற்கனவே கேட்ட பொழுது மறுப்பலான பதிலை அளித்தார்.

அது மட்டுமல்லாது அகலமாக வந்து கொண்டி ருக்கும் சாலை திடீரென சுருக்கப்பட்டுள்ளது அந்தந்த கடை மற்றும் உரிமையாளர்களிடம் பெருமளவில் பணம் பெற்றுக் கொண்டு ஏழை எளிய கூரை குடிசைகாரர்களுக்கு இடங்களை அகற்றியும் பாரபட்சமாகநடந்து கொண்டது கண்டறியப்பட்டது. நிழல் தரும் பெரிய பல நூறு மரங்களை அகற்றியதிலும் முறைகேடு நடந்ததாக அலுவலக வட்டாரங்களில் பேசப்படுகிறது மரங்களு க்கான தொகையையும் டென்டரையும் முறையாக பதிவிடவில்லை என்றும் மரங்கள் விற்றதற்கான பணத்தை அரசுக்கு மறைத்ததாகவும் கூறப்படுகிறது. முறைகேடு நடந்து வருவதாக சமூக ஆர்வலர் மற்றும் பொதுமக்கள் குற்றச்சாட்டு இது குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்குமா என்பதே கேள்விக்குறியாக உள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161